isentia
AUTHOR: No author available SECTION: NEWS PAGE: 13,16 PRINTED SIZE: 1663.00cm² REGION: KL
MARKET: Malaysia PHOTO: Full Color ASR: MYR 10,885.00 ITEM ID: MY0062435032



05 FEB, 2025

# Electricity tariff hike will not affect 85% of the population - PM Anwar

Makkal Osai, Malaysia

காஸா மறுநிர்மாணிப்பு என்பது அனைத்துலக நாடுகளின் கூட்டுக் கடப்பாடு

நெல் உற்பத்தியை அதிகரிக்க ஒரு பில்லியன் ரிங்கிட் ஒதுக்கீட்டிற்கு புத்ராஜெயா அங்கீகாரம்

7 புதிய சட்டமசோதாக்களுக்கு மாட்சிமை தங்கிய மாமன்னர் அங்கீகாரம் அளித்தார்

ஆன்லைன் குற்றச்செயலையும் மோசடிகளையும் ஒடுக்குவதில் புதிய சட்டம் முக்கியப் பங்காற்றும்

## மின்சாரக் கட்டண உயர்வு
# 85% மக்களுக்குப் பாதிப்பு வராது
## மக்களவையில் பிரதமர் உறுதி







**கோலாலம்பூர், பிப். 5-**

**மின்சாரக் கட்டண உயர்வு தொழில்துறை பயனீட்டாளர்களையும் பெரிய செல்வந்தர்களையும் மட்டுமே சம்பந்தப் படுத்துகிறது என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வர் இப்ராஹிம் நேற்று நாடாளுமன்றத்தில் தெளிவுபடுத்தினார்.**

ஆகவே மின்சாரக் கட்டண உயர்வு பெரும்பான்மை மக்களுக்குப் பாதிப்பைக் கொண்டு வராது என்று அவர் மேலும் சொன்னார். ஜூலை மாதம் தொடங்கி தொழில்துறைக்கு மட்டுமே மின்சாரக் கட்டணம் உயர்த்தப்படுகிறது என்று அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

கிட்டத்தட்ட 85 விழுக்காட்டு மக்கள் இந்த மின்சாரக் கட்டண உயர்வால் பாதிக்கப்பட மாட்டார்கள் என்று அவர் நாடாளுமன்றத்தில் பிரதமருக்கான கேள்வி - பதில் நேரத்தின் போது குறிப்பிட்டார்.

மக்களவையில் மாச்சாங் தொகுதி பெரிக்காத்தான் நேஷனல் நாடாளுமன்ற உறுப்பினர் வான் அகமட் ஃபைசால் வான் அகமட் கமால் எழுப்பிய கேள்விக்குப் பிரதமர் பதிலளித்தார். சுகாதாரம், கல்வி போன்ற மற்ற துறைகளுக்கும் நிதி அளிக்க மின்சாரக் கட்டண விகிதத்தை உயர்த்த வேண்டியுள்ளது என்று அன்வார் சுட்டிக்காட்டினார்.

தொழில்துறையினருக்கும் பெரிய செல்வந்தர்களுக்கும் மட்டுமே மின் கட்டணம் உயர்த்தப் படுகிறது என்றும் அவர் பதிலளித்தார். அதேசமயம் பெரிய செல்வந்தர்களுக்கு நாம் வரி விதிக்காவிடில் பள்ளிக்கூடங்களுக்கும் மருத்துவமனைகளுக்கும் எப்படி நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க முடியும்? பணம் எங்கிருந்து வரும் என்று அவர் கேட்டார். மின் கட்டண உயர்வு குறித்து அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும் என இதற்கு முன் வான் ஃபைசால் கேட்டிருந்தார்.



### காஸா மறு நிர்மாணிப்பு

காஸா மறு நிர்மாணிப்புக்கு உதவ ஜப்பானுடன் இணைந்து செயல்படுவதற்கு மலேசியாவுக்கு ஒரு கௌரவம் வழங்கப் பட்டிருப்பதை அனைத்துத் தரப்பினரும் பார்க்க வேண்டும் என வெளியுறவு அமைச்சர் டத்தோஸ்ரீ முகமட் ஹசான் மக்களவையில் கூறினார்.

இந்த மறு நிர்மாணிப்புக்கு அதிகக் காலம் தேவைப்பட்டாலும் அதற்கான செலவும் மிக அதிகமாக இருக்கும். இது அனைத்துலகத்தின் கடப்பாடு. பாலஸ்தீன விடுதலைக்கு ஆதரவு தெரிவிக்கும் நாடுகள் இந்தப் பொறுப்பைச் சுமக்க வேண்டும் என்று அவர் சொன்னார். ஆனால் அதேசமயம் சொந்த நாடு அலட்சியம் செய்யப்பட மாட்டாது என்றும் அவர் விளக்கமளித்தார். மக்களவையில் கேள்வி - பதில் நேரத்தின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

வீட்டிலுள்ள குழந்தை பட்டினியால் இறக்கிறது. ஆனால் காட்டில் உள்ள குரங்குக்கு உணவு அளிக்கப் படுகிறது என்று சிலர் கூறுகின்றனர். அப்படி எதுவும் நடக்கவில்லை. காட்டிலுள்ள குரங்குகளுக்கு நாம் பால் தரவில்லை. வீட்டிலுள்ள பிள்ளையும் இறந்து போகவில்லை. இது அனைத்துலகக் கடப்பாடு.

பாலஸ்தீனத்தை ஆதரிக்கும் நாடு எனும் முறையில் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறோம் என்று அவர் சொன்னார்.

மக்களவையில் லேடாங் தொகுதி பக்காத்தான் ஹராப்பான் நாடாளுமன்ற உறுப்பினர் சைட் இப்ராஹிம் சைட் நோர் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

### நெல் உற்பத்தி விவகாரம்

கெடாவில் நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கு மாடா எனப்படும் மூடா விவசாய மேம்பாட்டுக் கழகத்திற்கு ஒரு பில்லியன் ரிங்கிட் ஒதுக்கீட்டை புத்ராஜெயா அங்கீகரித்திருக்கிறது என்று நிதி அமைச்சருமான டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கெடாவில் நெல் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டம் இந்த மாத இறுதியில் தொடங்கும். நெல் உற்பத்தியை அதிகரிக்க கூடுதலாக ஒரு பில்லியன் ரிங்கிட் ஒதுக்கீடு வழங்கப்படுகிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதன் மூலம் உள்நாட்டு நெல் உற்பத்தி இப்போது 56 விழுக்காடாக இருக்கின்ற நிலையில் அதனை 70 விழுக்காடு வரை உயர்த்த முடியும் என்று அவர் மக்களவையில் கேள்வி - பதில் நேரத்தின்போது குறிப்பிட்டார்.

மக்களவையில் பெலூரான் தொகுதி பெரிக்காத்தான் நேஷனல் நாடாளுமன்ற உறுப்பினர் ரொனால்ட் கியாண்டி எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

உள்நாட்டு அரிசி உற்பத்தியை 70 விழுக்காடு வரையில் உயர்த்துவதற்கும் வெளிநாட்டில் இருந்து 30 விழுக்காடு வரை அரிசியை இறக்குமதி செய்வதற்கும் நடப்புக் கொள்கைகளை அரசாங்கம் மறு ஆய்வு செய்ய உத்தேசித்திருக்கிறதா என்று ரொனால்ட் கியாண்டி கேள்வி எழுப்பி இருந்தார்.

### 7 சட்டங்கள் நிறைவேற்றம்

நடப்பு நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் 7 சட்டமசோதாக்களுக்கு மாட்சிமை தங்கிய மாமன்னர் சுல்தான் இப்ராஹிம் அங்கீகாரம் அளித்திருக்கிறார். 15ஆவது நாடாளுமன்றத்தின் 3ஆம் தவணைக்கான இந்தக் கூட்டத் தொடரில் இந்தச் சட்டமசோதாக்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மக்களவை சபாநாயகர் டான்ஸ்ரீ ஜொஹாரி அப்துல் இத்தகவலைக் கூறினார்.

2025 விநியோகச் சட்டம், 2024 நிதிச் சட்டம், 2024 வரி அமலாக்க நிர்வாகம் வசூல் நடவடிக்கைகள் சட்டம், 2024 லாபுவான் வர்த்தக நடவடிக்கை வரிச்சட்டம், 2025 தொற்றுநோய் கட்டுப்பாட்டுத் தடுப்புச் சட்டம், 2025 தொடர்பு பல்லூடகச் சட்டம், 2025 குடிநீர் சேவை தொழில்துறைச் சட்டம் ஆகியவையே மாமன்னரால் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களாகும்.



### ஆன்லைன் குற்றச்செயல்கள்

2024 திருத்தம் தொடர்பு பல்லூடகச் சட்டத்தின்



Provided for client's internal research purposes only. May not be further copied, distributed, sold or published in any form without the prior consent of the copyright owner.